## முதன்மை உடற்கல்வி ஆய்வாளரின் செயல்முறைகள், சென்னை–06

ந.க.எண். 20250/CIPE/2023, நாள்: 07.07.2023

| | |
|---|---|
| பொருள்: | பள்ளிக்கல்வி துறை – உடற்கல்வி – பள்ளி மாணவ மாணவியருக்கான பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் (BDG), குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள் (RDG), குடியரசு தின தடகளப்போட்டிகள் (RDS), பாரதியார் தின/குடியரசு தினப் (BD/RD) போட்டிகள் – நிலையான வழிகாட்டுதல்கள் – நடைமுறைப்படுத்த ஆணை வழங்குதல் –சார்ந்து |

*********

மாணவர்களின் உள்ளார்ந்த விளையாட்டுத் திறனை வெளிக்கொண்டுவரும் நோக்கத்துடன், தமிழக பள்ளிக் கல்வித் துறை பல்வேறு நிலைகளில் போட்டிகளை நடத்தி அவர்களுடைய திறன்களை கண்டறிந்து மாணவர்களின் திறன்களுக்கு ஏற்ப விளையாட்டுகளை தெரிவு செய்து உரிய பயிற்சி வழங்கி பள்ளியளவிலிருந்து மாநில அளவிலான போட்டிகள் வரை பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் (BDG), குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள் (RDG), குடியரசு தின தடகளப் போட்டிகள் (RDS) மற்றும் பாரதியார் தின/குடியரசு தினப் (BD/RD Competitions) போட்டிகள் என ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், திறன்மிக்க மாணவர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

### விளையாட்டுப் போட்டிகள் சார்ந்த வழிகாட்டுதல்கள்

- ❖ 2023 – 2024 ஆம் கல்வி ஆண்டிற்கான பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் (BDG), குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள் (RDG), குடியரசு தின தடகளப் போட்டிகள் (RDS) மற்றும் பாரதியார் தின/குடியரசு தினப் (BD/RD Competitions) போட்டிகள் 318 குறுவட்டங்களுக்கான போட்டிகள், 38 வருவாய் மாவட்டங்களுக்கான போட்டிகள் மற்றும் மாநில அளவிலான போட்டிகள் என மூன்று நிலைகளாக நடைபெறும்.
- ❖ பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் (BDG) 19 வயதிற்குட்பட்ட மாணவ மாணவியர்களுக்கும், குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள் (RDG) 14 மற்றும் 17 வயதிற்குட்பட்ட மாணவ மாணவியர்களுக்கும், குடியரசு தின தடகளப் போட்டிகள் (RDS) 14, 17 மற்றும் 19 வயதிற்குட்பட்ட மாணவ மாணவியர்களுக்கும் மற்றும் பாரதியார் தின/குடியரசு தினப் (BD/RD Competitions) போட்டிகள் 14, 17 மற்றும் 19 வயதிற்குட்பட்ட மாணவ மாணவியர்களுக்கும் குறுவட்டம் முதல் மாநில அளவில் நடத்தப்படுகின்றன.
- ❖ தமிழ்நாடு பள்ளிக்கல்வி துறையின் கீழ் இயங்கும் அனைத்து வகையான நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ மாணவியர்கள் இவ்விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கத் தகுதியானவர்கள். தொடக்கப்பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ மாணவியர்கள் சதுரங்கப் போட்டிகளில் பங்கேற்கத் தகுதியானவர்கள்.

2023 – 2024 கல்வி ஆண்டிற்கான மாணவ மாணவியர்களுக்கான வயதுப் பிரிவுகளை கீழ்க்காண் அட்டவணையில் கண்டுள்ளபடி தீர்மானிக்கப்பட வேண்டும்.

| வ. எண். | வயதுப் பிரிவு | வகுப்புகள் | பிறந்த தேதி (தேதி முதல் அல்லது அதற்கு பிறகு) (Born on or after) |
|---|---|---|---|
| 1. | 11 வயதிற்குட்பட்ட மாணவ மாணவிகள் | 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை | 01.01.2013 |
| 2. | 14 வயதிற்குட்பட்ட மாணவ மாணவிகள் | 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை | 01.01.2010 |
| 3. | 17 வயதிற்குட்பட்ட மாணவ மாணவிகள் | 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை | 01.01.2007 |
| 4. | 19 வயதிற்குட்பட்ட மாணவ மாணவிகள் | 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை | 01.01.2005 |

## குறுவட்ட அளவிலான போட்டிகள்

| வ. எண். | பாரதியார் தின/குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள் ((BDG/RDG) (Group A Games) | அணி வீரர்கள் |
|---|---|---|
| 1 | கால்பந்து | 18 |
| 2 | வளைகோல் பந்து | 18 |
| 3 | கபடி | 12 |
| 4 | கோ–கோ | 12 |
| 5 | கையுந்துபந்து | 12 |
| 6 | கூடைப்பந்து | 12 |
| 7 | எறிபந்து | 14 |
| 8 | கைப்பந்து | 16 |
| 9 | பூப்பந்து | 10 |
| 10 | மேசைப்பந்து (ஒ) | 1 |
| | மேசைப்பந்து (இ) | 2 |
| 11 | இறகுப்பந்து (ஒ) | 1 |
| | இறகுப்பந்து (இ) | 2 |
| 12 | டென்னிஸ் (ஒ) | 1 |
| | டென்னிஸ் (இ) | 2 |

| வ. எண். | பாரதியார் தின/குடியரசு தினப் போட்டிகள் ((BD/RD Competitions) (Group B Games) |
|---|---|
| 1 | கேரம் (ஒ&இ) |
| 2 | வளையப்பந்து (ஒ&இ) |

## குடியரசு தின தடகளப் போட்டிகள் (RDS) மாணவர்கள்

(Group C Competitions)

| 14 வயதிற்குட்பட்டவர்கள் | | 17 வயதிற்குட்பட்டவர்கள் | | 19 வயதிற்குட்பட்டவர்கள் | |
|---|---|---|---|---|---|
| 1 | 100 மீ ஓட்டம் | 1 | 100 மீ ஓட்டம் | 1 | 100 மீ ஓட்டம் |
| 2 | 200 மீ ஓட்டம் | 2 | 200 மீ ஓட்டம் | 2 | 200 மீ ஓட்டம் |
| 3 | 400 மீ ஓட்டம் | 3 | 400 மீ ஓட்டம் | 3 | 400 மீ ஓட்டம் |
| 4 | 600 மீ ஓட்டம் | 4 | 800 மீ ஓட்டம் | 4 | 800 மீ ஓட்டம் |
| 5 | 80 மீ தடையோட்டம் (0.762 மீ.) | 5 | 1500 மீ ஓட்டம் | 5 | 1500 மீ ஓட்டம் |
| 6 | நீளம் தாண்டுதல் | 6 | 3000 மீ ஓட்டம் | 6 | 3000 மீ ஓட்டம் |
| 7 | உயரம் தாண்டுதல் | 7 | 110 மீ தடையோட்டம் (0.914 மீ.) | 7 | 110 மீ தடையோட்டம் (0.914 மீ) |
| 8 | குண்டு எறிதல் (4 கிலோ) | 8 | உயரம் தாண்டுதல் | 8 | 400 மீ தடையோட்டம் (0.84 மீ.) |
| 9 | வட்டு எறிதல் (1 கிலோ) | 9 | நீளம் தாண்டுதல் | 9 | உயரம் தாண்டுதல் |
| 10 | 4 X 100 மீ தொடரோட்டம் | 10 | மும்முறை தாண்டுதல் | 10 | நீளம் தாண்டுதல் |
| | | 11 | கோல் ஊன்றி தாண்டுதல் | 11 | மும்முறை தாண்டுதல் |
| | | 12 | குண்டு எறிதல் (5 கிலோ) | 12 | கோல் ஊன்றி தாண்டுதல் |
| | | 13 | வட்டு எறிதல் (1.5 கிலோ) | 13 | குண்டு எறிதல் (5 கிலோ) |
| | | 14 | ஈட்டி எறிதல் (700 கிராம்) | 14 | வட்டு எறிதல் (1.5 கிலோ) |
| | | 15 | 4 X 100 மீ தொடரோட்டம் | 15 | ஈட்டி எறிதல் (700 கிராம்) |
| | | 16 | 4 X 400 மீ தொடரோட்டம் | 16 | 4 X 100 மீ தொடரோட்டம் |
| | | | | 17 | 4 X 400 மீ தொடரோட்டம் |

## குடியரசு தின தடகளப் போட்டிகள் (RDS) மாணவிகள்

(Group C Competitions)

| 14 வயதிற்குட்பட்டவர்கள் | | 17 வயதிற்குட்பட்டவர்கள் | | 19 வயதிற்குட்பட்டவர்கள் | |
|---|---|---|---|---|---|
| 1 | 100 மீ ஓட்டம் | 1 | 100 மீ ஓட்டம் | 1 | 100 மீ ஓட்டம் |
| 2 | 200 மீ ஓட்டம் | 2 | 200 மீ ஓட்டம் | 2 | 200 மீ ஓட்டம் |
| 3 | 400 மீ ஓட்டம் | 3 | 400 மீ ஓட்டம் | 3 | 400 மீ ஓட்டம் |
| 4 | 600 மீ ஓட்டம் | 4 | 800 மீ ஓட்டம் | 4 | 800 மீ ஓட்டம் |
| 5 | 80 மீ தடையோட்டம் (0.762 மீ.) | 5 | 1500 மீ ஓட்டம் | 5 | 1500 மீ ஓட்டம் |
| 6 | நீளம் தாண்டுதல் | 6 | 3000 மீ ஓட்டம் | 6 | 3000 மீ ஓட்டம் |
| 7 | உயரம் தாண்டுதல் | 7 | 100 மீ தடையோட்டம் (0.762 மீ.) | 7 | 100 மீ தடையோட்டம் (0.762 மீ.) |
| 8 | குண்டு எறிதல் (3 கிலோ) | 8 | உயரம் தாண்டுதல் | 8 | 400 மீ தடையோட்டம் (0.762 மீ.) |
| 9 | வட்டு எறிதல் (1 கிலோ) | 9 | நீளம் தாண்டுதல் | 9 | உயரம் தாண்டுதல் |
| 10 | 4 X 100 மீ தொடரோட்டம் | 10 | மும்முறை தாண்டுதல் | 10 | நீளம் தாண்டுதல் |
| | | 11 | கோல் ஊன்றி தாண்டுதல் | 11 | மும்முறை தாண்டுதல் |
| | | 12 | குண்டு எறிதல் (3 கிலோ) | 12 | கோல் ஊன்றி தாண்டுதல் |
| | | 13 | வட்டு எறிதல் (1 கிலோ) | 13 | குண்டு எறிதல் (3 கிலோ) |
| | | 14 | ஈட்டி எறிதல் (500 கிராம்) | 14 | வட்டு எறிதல் (1 கிலோ) |
| | | 15 | 4 X 100 மீ தொடரோட்டம் | 15 | ஈட்டி எறிதல் (500 கிராம்) |
| | | 16 | 4 X 400 மீ தொடரோட்டம் | 16 | 4 X 100 மீ தொடரோட்டம் |
| | | | | 17 | 4 X 400 மீ தொடரோட்டம் |

## சதுரங்கப் போட்டிகள்

(Group D Game)

**சதுரங்கம்**

**(11, 14, 17 மற்றும் 19 வயதிற்குட்பட்ட மாணவர்கள் மாணவிகள்)**

## வருவாய் மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகள்

| வ. எண். | பாரதியார் தின/குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள் ((BDG/RDG) (Group A Games) | அணி வீரர்கள் |
|---|---|---|
| 1 | கால்பந்து | 18 |
| 2 | வளைகோல் பந்து | 18 |
| 3 | கபடி | 12 |
| 4 | கோ–கோ | 12 |
| 5 | கையுந்துபந்து | 12 |
| 6 | கூடைப்பந்து | 12 |
| 7 | எறிபந்து | 14 |
| 8 | கைப்பந்து | 16 |
| 9 | பூப்பந்து | 10 |
| 10 | மேசைப்பந்து (ஒ) | 1 |
| | மேசைப்பந்து (இ) | 2 |
| 11 | இறகுப்பந்து (ஒ) | 1 |
| | இறகுப்பந்து (இ) | 2 |
| 12 | டென்னிஸ் (ஒ) | 1 |
| | டென்னிஸ் (இ) | 2 |

| வ. எண். | பாரதியார் தின/குடியரசு தினப் போட்டிகள் ((BD/RD Competitions) (Group B Games) |
|---|---|
| 1 | கேரம் (ஒ & இ) |
| 2 | வளையப்பந்து (ஒ & இ) |
| 3 | குத்துச்சண்டை |
| 4 | டேக்வாண்டோ |
| 5 | சிலம்பம் |
| 6 | கடற்கரை கையுந்துபந்து |
| 7 | வாள்சண்டை |
| 8 | ஜூடோ |
| 9 | ஜிம்னாஸ்டிக்ஸ் |
| 10 | ஸ்குவாஷ் (ஒ & இ) |
| 11 | நீச்சல் |
| 12 | சாலையோர மிதிவண்டி |

**குடியரசு தின தடகளப் போட்டிகள் (RDS)**
(Group C Competitions)

**சதுரங்கப் போட்டிகள்**
(Group D Game)
**சதுரங்கம்**
**(11, 14, 17 மற்றும் 19 வயதிற்குட்பட்ட மாணவர்கள் மாணவிகள்)**

**போட்டிகளில் கலந்து கொள்வதற்கான விதிமுறைகள்:**

- ஒரு வீரர் ஒரு வயது பிரிவு போட்டிகளில் மட்டுமே பங்கேற்க முடியும்.
- **ஒவ்வொரு கல்வியாண்டின் டிசம்பர் 31ஆம் தேதியின்படி வயது கணக்கிடப்படுகிறது.**
- ஒரு வீரர் ஒரு கல்வியாண்டில் கீழுள்ள அட்டவணையில் உள்ளபடி அதிகபட்சம் 3 விளையாட்டுப் பிரிவுகளில் பங்கேற்கலாம்.

| 1 | 2 | 3 |
|---|---|---|
| பாரதியார் தின/குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள் ((BDG/RDG) (Group A Games) **12 – ல் ஏதேனும் ஒன்று மட்டும்** (ஒரே விளையாட்டின் ஒற்றையர் மற்றும் இரட்டையர் போட்டிகள் இரண்டிலும் ஒரு வீரர் பங்கேற்கலாம்) | பாரதியார் தின/குடியரசு தின போட்டிகள் (BD/RD Competitions) (Group B Games) & சதுரங்கப் போட்டிகள் (Group D Game) சதுரங்கம் **12 + 1 – ல் ஏதேனும் ஒன்று மட்டும்** (ஒரே விளையாட்டின் ஒற்றையர் மற்றும் இரட்டையர் போட்டிகள் இரண்டிலும் ஒரு வீரர் பங்கேற்கலாம்) | குடியரசு தின தடகளப்போட்டிகள் (RDS) (Group C Competitions) **ஏதேனும் 3 போட்டிகள்** (3 Events) (தொடரோட்டப் போட்டியைத் தவிர்த்து) 14 வயதிற்குட்பட்டவர்களுக்கு ஒரு தொடரோட்டப் போட்டி, 17 மற்றும் 19 வயதிற்குட்பட்டவர்களுக்கு இரண்டு தொடரோட்டப் போட்டிகள் |

## ஒரு பள்ளி அணி/தனிநபர் போட்டிகளில் பங்குபெறும் தகுதி:

| வ எண் | விளையாட்டின் பெயர் | ஒவ்வொரு பள்ளியிலிருந்து போட்டிகளில் பங்கு பெறும் தகுதி |
|---|---|---|
| **பாரதியார் தின/குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள் (BDG/RDG)** (Group A Games) | | |
| 12 விளையாட்டுக்கள் | | ஒவ்வொரு விளையாட்டிற்கும் ஒவ்வொரு வயது பிரிவிலும் ஒரு அணி மட்டும் கலந்து கொள்ளலாம். |
| **பாரதியார் தின/குடியரசு தினப் போட்டிகள் (BD/RD Competitions)** (Group B Games) | | |
| 1 | குத்துச்சண்டை, டேக்வாண்டோ, சிலம்பம் மற்றும் ஜூடோ | ஒவ்வொரு வயது பிரிவிலும் ஒவ்வொரு எடைப்பிரிவிற்கும் ஒரு வீரர் மட்டும் கலந்து கொள்ளலாம். |
| 2 | கடற்கரை கையுந்துபந்து | ஒவ்வொரு வயது பிரிவிலும் ஒரு அணி மட்டும் கலந்து கொள்ளலாம். |
| 3 | வாள்சண்டை | ஒவ்வொரு வயது பிரிவிலும் சாபர் (Sabre), ∴ பாயில் (Foil) மற்றும் எபி (Epee) போட்டிகளுக்கு இரண்டு போட்டியாளர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம். |
| 4 | ஜிம்னாஸ்டிக்ஸ் | ஒவ்வொரு வயது பிரிவிலும் 7 போட்டியாளர்கள் கலந்து கொள்ளலாம். |
| 5 | நீச்சல் | ஒவ்வொரு வயது பிரிவிலும் ஒவ்வொரு போட்டிக்கும் (each event) இரண்டு போட்டியாளர்கள் கலந்து கொள்ளலாம். ஒரு வீரர் 2 தொடரோட்டங்களைத் தவிர/தவிர்த்து ( excluding 2 Relays) 3 தனிநபர் போட்டிகளில் கலந்து கொள்ளலாம். |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 6 | கேரம், வளையப்பந்து மற்றும் ஸ்குவாஷ் | ஒவ்வொரு விளையாட்டிலும் ஒவ்வொரு வயது பிரிவிலும் ஒற்றயர் மற்றும் இரட்டையர் பிரிவுகளுக்கு ஒரு அணி மட்டும் கலந்து கொள்ளலாம். |
| 7 | சாலையோர மிதிவண்டி | ஒவ்வொரு வயது பிரிவிலும் 2 போட்டியாளர்கள் கலந்து கொள்ளலாம். |
| **குடியரசு தின தடகளப் போட்டிகள் (RDS)**<br>(Group C Competitions) | | |
| | தடகளம் | ஒவ்வொரு வயது பிரிவிலும் ஒவ்வொரு போட்டிக்கும் (each event) இரண்டு போட்டியாளர்கள் கலந்து கொள்ளலாம். ஒரு வீரர் 2 தொடரோட்டங்களைத் தவிர/தவிர்த்து (excluding 2 Relays) 3 தனிநபர் போட்டிகளில் கலந்து கொள்ளலாம். |
| தவிர்க்க முடியாத காரணங்களுக்காக தொடரோட்ட அணியில் ஒரு தடகள வீரர் வராத காரணத்தால், தொடரோட்ட அணி போட்டியில் பங்கேற்க முடியாமல் போவதைத் தவிர்க்கும் நோக்கில், அனைத்து கட்ட போட்டிகளுக்கும் ஒரு மாற்று வீரரை சேர்த்துக்கொள்ளலாம். மாற்று வீரர் பயண மற்றும் பஞ்சபடி (TA & DA) பெறத் தகுதியானவர். ஆனால், தொடரோட்டத்தின் இறுதிப் போட்டியில் பங்கேற்ற 4 வீரர்களுக்கு மட்டுமே சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்படும். | | |
| **சதுரங்கப் போட்டிகள்**<br>(Group D Game) | | |
| | சதுரங்கம் | ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் ஒவ்வொரு வயது பிரிவிற்கும் இரண்டு போட்டியாளர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம். |

| | | |
|---|---|---|
| **பாரதியார் தின/குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள் (BDG/RDG)** | | |
| | **பாரதியார் தின/குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள்** | ஒவ்வொரு விளையாட்டிலும் குறுவட்டப் போட்டிகளில் முதலிடம் பெறுபவர்கள் மட்டுமே வருவாய் மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதியுடையவர்கள். வருவாய் மாவட்டப் போட்டிகளில் முதலிடம் பெறுபவர்கள் மட்டுமே மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதியுடையவர்கள். |
| **பாரதியார் தின/குடியரசு தினப் போட்டிகள் (BD/RD Competitions)** | | |
| 1 | குத்துச்சண்டை, ஜூடோ, சிலம்பம் & டேக்வாண்டோ | ஒவ்வொரு வயது பிரிவிலும் ஒவ்வொரு எடைப் பிரிவிலும் வருவாய் மாவட்டப் போட்டிகளில் முதல் இடம் பெறுபவர்கள் மட்டுமே மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதியுடையவர்கள். |
| 2 | கடற்கரை கையுந்துபந்து | வருவாய் மாவட்டப் போட்டிகளில் முதலிடம் பெறுபவர்கள் மட்டுமே மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதியுடையவர்கள். |
| 3 | வாள்சண்டை | வருவாய் மாவட்டப் போட்டிகளில் சாபர் (Sabre), ஃபாயில் (Foil) மற்றும் எபி (Epee) – தனிநபர் போட்டிகளில் முதல் 4 போட்டியாளர்களும் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதியுடையவர்கள். |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 4 | ஜிம்னாஸ்டிக்ஸ் | ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் முதல் 7 வீரர்கள் அடுத்த கட்டப் போட்டிகளில் பங்கேற்க தகுதியுடையவர்கள். |
| 5 | நீச்சல் | வருவாய் மாவட்டப் போட்டிகளில் ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் ஒவ்வொரு போட்டியிலும் (Event) முதல் இரண்டு இடம், தொடரோட்டப் போட்டிகளில் முதலிடம் பெறும் வீரர்கள் மட்டுமே மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதியுடையவர்கள். |
| 6 | கேரம் மற்றும் வளையப்பந்து | ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் குறுவட்டப் போட்டிகளில் முதலிடம் பெறுபவர்கள் மட்டுமே வருவாய் மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதியுடையவர்கள். வருவாய் மாவட்டப் போட்டிகளில் முதலிடம் பெறுபவர்கள் மட்டுமே மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதியுடையவர்கள். |
| 7 | ஸ்குவாஷ் | ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் வருவாய் மாவட்டப் போட்டிகளில் முதலிடம் பெறுபவர்கள் மட்டுமே மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதியுடையவர்கள். |
| 8 | சாலையோர மிதிவண்டி | ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் வருவாய் மாவட்டப் போட்டிகளில் முதலிடம் பெறுபவர்கள் மட்டுமே மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதியுடையவர்கள். |
| | **குடியரசு தின தடகளப் போட்டிகள் (RDS)** | |
| | தடகளப்போட்டிகள் | குறுவட்ட தடகள தனிநபர் போட்டிகளில் முதல் இரண்டு இடங்களையும், தொடரோட்டப் போட்டிகளில் முதல் இடத்தையும் பெறும் வீரர்கள் வருவாய் மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதியுடையவர்கள். வருவாய் மாவட்ட தடகள தனிநபர் போட்டிகளில் முதல் இரண்டு இடங்களையும், தொடரோட்டப் போட்டிகளில் முதல் இடத்தையும் பெறும் வீரர்கள் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்க தகுதியுடையவர்கள். |
| | **சதுரங்கப் போட்டிகள்** | |
| | சதுரங்கப் போட்டிகள் | சதுரங்கப் போட்டிகளில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்கள் குறுவட்டம் முதல் மாநில அளவில் அனைத்து நிலைகளிலும் அடுத்த கட்டப் போட்டிகளில் பங்கேற்க தகுதியுடையவர்கள். |

- குறுவட்ட அளவில் கலந்துகொள்ளும் அணி/தனி நபர் நுழைவுப் படிவங்களுடன் தலைமையாசிரியர்/முதல்வர் மற்றும் அணி மேலாளருடன் அணியினர் எடுத்துக்கொண்ட புகைப்படம் / புகைப்படத்துடன் கூடிய தனிநபர் அடையாளப்படிவம் (Team/Individual Entry Forms along with Team Photo /Individual Photo Identity Form) சார்ந்த தலைமையாசிரியரால் சான்றளிக்கப்பட்டு 3 அசல்கள் (3 Original Copies) தயார் செய்து 2 பிரதிகளை குறுவட்ட செயலாளரிடம் ஒப்படைத்து விட்டு ஒரு பிரதியை தன் வசம் வைத்துக்கொள்ள வேண்டும்.
- மாணவ மாணவிகளின் வயதை உறுதி செய்ய, 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகள் தங்களின் பிறப்பு சான்றிதழின் நகலினையும், 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவிகள் தங்களின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் பட்டியலையும் நுழைவுப் படிவத்துடன் இணைக்கப் படவேண்டும்.

- அணிகள் வருவாய் மாவட்ட அளவில் விளையாட தகுதி பெறும்போது, குறுவட்டச் செயலாளர்கள் நுழைவுப் படிவங்கள் மற்றும் புகைப்படங்கள் / புகைப்படத்துடன் கூடிய தனிநபர் அடையாளப்படிவம் (Team/Individual Entry Forms along with Team Photo / Individual Photo Identity Form) 2 பிரதிகளை வருவாய் மாவட்டச் செயலாளர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும்.
- அணிகள் மாநில அளவில் விளையாட தகுதி பெறும்போது, வருவாய் மாவட்டச் செயலாளர்கள் நுழைவுப் படிவங்கள் மற்றும் புகைப்படங்கள் / புகைப்படத்துடன் கூடிய தனிநபர் அடையாளப்படிவம் (Team/Individual Entry Forms along with Team Photo / Individual Photo Identity Form) 2 பிரதிகளை போட்டிகள் முடிந்த இரண்டு தினங்களுக்குள் மாநில போட்டிகள் நடத்தும் மாநில செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

- மாநில அளவிலான போட்டிகளில் பங்குபெறும் அணிகளின் நுழைவுப் படிவங்கள் மற்றும் புகைப்படங்கள் (Team/Individual Entry Forms along with Team Photo /Individual Idendity Form with Photo) போன்ற ஆவணங்கள் மாநில அளவிலான போட்டிகளை நடத்தும் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் அலுவலகத்தால் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும், மேற்காண் ஆவணங்களை தேவைப்படும் நேரத்தில் ஆதாரமாக சமர்ப்பிக்க வேண்டும்.

- பாரதியார் தின மற்றும் குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில் (BDG & RDG) பங்கு பெறும் அணிகளின் எண்ணிக்கை 2 அல்லது அதற்கு மேற்பட்டதாக இருந்தால், போட்டிகள் அனைத்து நிலைகளிலும் நடத்தப்பட வேண்டும் . எந்த நிலையிலும் பாரதியார் தின மற்றும் குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில் ஒற்றை நுழைவு ஏற்பட்டால், தகுதிச் சான்றிதழ் (merit certificate) வழங்கப்படமாட்டாது. ஆனால் அவர்கள் அடுத்த நிலை போட்டியில் பங்கேற்க தகுதியுடையவர்கள் ஆவார்கள்.
- அடுத்த கட்டப் போட்டிகளுக்குத் தகுதி பெற்ற எந்தவொரு அணியும்/ தனி நபரும் போட்டிக்குச் செல்லவில்லை என்றால், அடுத்த சிறந்த அணி/ தனி நபர் அடுத்த கட்டப் போட்டிகளில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.

- ❖ மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் அவர்களின் முன் அனுமதியுடன் SGFI தெரிவுப்போட்டிகள், SGFI தேசியப் போட்டிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் / கூட்டமைப்புகள் (SDAT மற்றும் தமிழ் நாடு ஒலிம்பிக் சங்கங்களால் அங்கீகரிக்கப்பட்டது) நடத்தும் போட்டிகளில் ஒரு அணியோ தனி நபரோ கலந்துகொண்ட காரணத்தினால் தமிழ்நாடு பள்ளிக்கல்வி துறை நடத்தும் விளையாட்டுப் போட்டிகளில் ஏதாவது ஒரு கட்டத்தில் கலந்து கொள்ளாத சூழ்நிலை ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்களுக்கு மேற்காண் போட்டிகளில் கலந்து கொண்டமைக்கான ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதே விளையாட்டில் (Same Game/ Sport Event) அடுத்த கட்டப் போட்டியில் (Revenue District /State) பங்கேற்க அனுமதி வழங்கப்படும். அந்த அணி / தனி நபர் பங்கேற்காத முந்தைய போட்டிகளுக்கு தகுதிச் சான்றிதழ் (Merit Certificate) வழங்கப்படமாட்டாது.

- ❖ அடுத்த கட்டப் போட்டிகளுக்கு பள்ளி அணியில் புதிதாக வீரர்களை (வருவாய் மாவட்டம் முதல் மாநில அளவில்) மாற்றுவது, சார்ந்த பள்ளியின் ஆளரிசான்றுடன் (மாறுதல் அல்லது துணைத் தேர்வுகள் காரணமாக பள்ளியில் சேருபவர்களுக்கு மட்டும் பொருந்தும்) குழுப் போட்டிகளுக்கு (RDG, BDG & RDS) மட்டும் (ஒற்றையர் மற்றும் இரட்டையர் போட்டிகளைத் தவிர்த்து) அனுமதிக்கப்படும். அதே நேரத்தில், பள்ளி அணியில் புதிதாக சேர்க்கப்படும் வீரர்/வீரர்கள் அதே கல்வியாண்டில் பள்ளிக் கல்வித் துறையால் நடத்தப்படும் போட்டிகளில் வேறு எந்தப் பள்ளிகளுக்காகவும் விளையாடியிருக்கக் கூடாது.

- ❖ நுழைவுப் படிவங்கள் (Entry Forms) எந்த கால கட்டத்திலும் சரிபார்க்கப்பட வேண்டி இருப்பதால், குறைந்தபட்சம் கடந்த 5 ஆண்டுகளின் அசல் நுழைவுப் படிவங்களுடன், தேவையான ஆவணங்களை உடற்கல்வி கோப்பில் மிகவும் கவனமாக பாதுகாக்கப்பட வேண்டும்.

**கட்டாய பங்கேற்பு:**

- ❖ எந்த ஒரு மாணவரும் எக்காரணம் கொண்டும் குழு விளையாட்டுக்கள் மற்றும் தடகளப் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பை மறுக்கக் கூடாது. விளையாட்டு வீரர்களின் கடந்த 4 ஆண்டுகளுக்கான விளையாட்டு சான்றிதழ்களுக்கு (Sports Certificates) அரசு/அரசு நிதியுதவி பெறும் /சுயநிதி மருத்துவக் கல்லூரிகள், அண்ணா பல்கலைக்கழகக் கல்லூரிகள், வேளாண் பல்கலைக்கழகக் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள், மருத்துவம் சார்ந்த படிப்புகள், சட்டக் கல்லூரிகள், தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்வதற்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றன. மாணவர்கள் படிக்கும் வகுப்புகளைப் பொருட்படுத்தாமல், அனைத்து விளையாட்டு வீரர்களும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க உரிய வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். விளையாட்டுப் போட்டிகளில் ஒரு மாணவருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டால், சார்ந்த பள்ளி தலைமையாசிரியரே அதன் பின் விளைவுகளுக்கு பொறுப்பாளராவார்.

- தடகளப் போட்டிகளில் தகுதி பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாலும், செலவினங்களைக் குறைப்பதற்காகவும், களப்போட்டிகளை (Field Events) வேறு மைதானத்தில் முன்னதாகவே நடத்திக் கொள்ளலாம்.

- பல்வேறு தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் இருப்பினும், குறுவட்ட, வருவாய் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் இருக்கும் உள்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி மிகுந்த சிரத்தையுடன் சிறந்த முறையில் நடத்தப்படுகின்றன. விளையாட்டுப் போட்டிகள் முறையே நடைபெற ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அனைத்து பள்ளிகளின் கடமையாகும். போட்டிகளுக்கு முன்னதாகவே விளையாட்டு மைதானத்தின் தன்மை மற்றும் தொழில் நுட்பம் சார்ந்த ஏற்பாடுகளை சரிபார்த்துக்கொள்வது போட்டிகளில் கலந்து கொள்ளும் அனைத்து பள்ளிகளின் உடற்கல்வி இயக்குநர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களின் பொறுப்பாகும். மேலும், மைதானம் மற்றும் தொழில் நுட்பம் சார்ந்து ஏதேனும் சரி செய்ய வேண்டியிருந்தால், அது போட்டி தொடங்குவதற்கு முன்னதாகவே சரி செய்யப்பட வேண்டும். மாவட்ட உடற்கல்வி ஆய்வாளரால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப குழுவின் வழிகாட்டுதல்களுடன் போட்டி தொடங்குவதற்கு முன்னதாகவே குறைகளை சரி செய்து கொள்வது சார்ந்த (குறையை சரிசெய்யக் கூறிய) உடற்கல்வி இயக்குநர்/உடற்கல்வி ஆசிரியரின் பொறுப்பாகும்.
- பள்ளியின் ஒவ்வொரு விளையாட்டு அணியின் புகைப்படம் எடுப்பதற்கான செலவினத்தை பள்ளி நிதியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பயண மற்றும் பஞ்சபடி (TA & DA) பெறத் தகுதி:**

- குடியரசு தின, பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் மற்றும் குடியரசு தின தடகளப் போட்டிகளில் கலந்து கொள்ளும் ஒரு பள்ளி அணியின் வீரர்கள் மற்றும் அணி மேலாளர்கள் குறுவட்ட மற்றும் வருவாய் மாவட்ட அளவிலான போட்டிகள் வரை தங்களது பயணப் படி, உணவு மற்றும் இதர செலவீனங்களை பள்ளி நிதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

- குழு விளையாட்டுக்கள் மற்றும் தடகளப் போட்டிகளில் பங்கேற்பதற்கான பயணப் படி, உணவு மற்றும் இதர செலவினங்களை சார்ந்த பள்ளி நிதியிலிருந்து செலுத்தப்பட வேண்டும். இந்தியப் பள்ளிகளுக்கான விளையாட்டுக் குழுமத்தின் (SGFI) பழைய விதிமுறைகளின்படி, ஒவ்வொரு அணி மாணவரும் மற்றும் அணி மேலாளரும் தங்களுக்கு செலவாகும் பயணப்படியுடன், கூடுதலாக ரூ . 125/.-ஐ (அதிகபட்சம்) ஒரு நாள் உணவுச் செலவாக சார்ந்த பள்ளி நிதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
- ஒரு அணி மேலாளர் அதிகபட்சம் 20 மாணவர்களை போட்டிகளுக்கு அழைத்துச் செல்லத் தகுதியானவர். மாணவர்களின் எண்ணிக்கை 20க்கு மேல் இருந்தால், மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றார்போல் கூடுதல் அணி மேலாளர்கள் மாணவர்களை அழைத்துச் செல்ல வேண்டும். பயணப் படியாக, சாதாரண பேருந்து கட்டணம் அல்லது முன்பதிவு செய்யப்பட்ட இரண்டாம் வகுப்பு படுக்கை ரயில் கட்டணத்தை பெறலாம்.

- குடியரசு தின, பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் மற்றும் குடியரசு தின தடகளப் போட்டிகளோடு (RDG, BDG & RDS), இந்தியப் பள்ளிகளுக்கான விளையாட்டுக் குழுமத்தின் (SGFI Regional & State Selection) மண்டல மற்றும் மாநில தெரிவுப் போட்டிகளில் கலந்து கொள்பவர்களும் மாணவர்கள் மற்றும் மாணவர்களை அழைத்துச் செல்லும் ஆசிரியர்கள் பயணப்படி மற்றும் பஞ்சப்படி (உணவுக்கான செலவுகள்) ( (TA & DA) பெறத் தகுதியானவர்கள்.

**பல்வேறுநிலை விளையாட்டு நிர்வாகக் குழுக்கள்:**

பின்வரும் அலுவலர்கள் பல்வேறு நிலைகளில் விளையாட்டு நிர்வாகக் குழு உறுப்பினர்களாக செயல்படுவார்கள்.

**பள்ளி விளையாட்டுக் குழு:**

ஒவ்வொரு பள்ளியிலும், "பள்ளி விளையாட்டுக் குழு" கிழ்கண்ட உறுப்பினர்களைக்கொண்டு அமைக்கப்பட வேண்டும்.

- தலைவர்: (President)

  தலைமை ஆசிரியர்
- செயலாளர்: (Secretary)

  உடற்கல்வி இயக்குநர்/ உடற்கல்வி ஆசிரியர்

  (உடற்கல்வி இயக்குநர் பதவி இல்லை என்றால், மூத்த உடற்கல்வி ஆசிரியர்)
- இணைச் செயலாளர்: (Joint Secretary)

  பிற உடற்கல்வி ஆசிரியர்கள்
- உறுப்பினர்கள் : (Members)

  3 பாட ஆசிரியர்கள்.
- மாணவர் உறுப்பினர்கள்:

  4 விளையாட்டு மாணவர்கள்

  (மேல்நிலைப் பள்ளி – 2 மேல்நிலைப் பள்ளி மற்றும் 2 உயர்நிலைப் பள்ளி மாணவர்கள்) (உயர்நிலைப் பள்ளி – 4 உயர்நிலைப் பள்ளி மாணவர்கள்)

**குறுவட்ட அளவில்:**

- நிர்வாக தலைவர்: (Adminstrative President)

  மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை)
- தொழில்நுட்ப தலைவர்: (Technical President)

  மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்
- குறுவட்ட செயலாளர்: (Zonal Secretary)

  போட்டிகள் நடத்தும் பள்ளி தலைமை ஆசிரியர்

  (முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளரால் தேர்ந்தெடுக்கப்படும் பள்ளி தலைமை ஆசிரியர்)
- இணைச் செயலாளர் (Joint Secretary)

  போட்டிகள் நடத்தும் பள்ளியின் உடற்கல்வி இயக்குநர்/ உடற்கல்வி ஆசிரியர் (உடற்கல்வி இயக்குநர் பதவி இல்லை என்றால், மூத்த உடற்கல்வி ஆசிரியர்)

www.Padasalai.Net

**வருவாய் மாவட்ட அளவில்:**

- நிர்வாக தலைவர்: (Adminstrative President)
  முதன்மை கல்வி அலுவலர் (CEO)
- துணைத் தலைவர்: (Vice–President)
  வருவாய் மாவட்ட கல்வி அலுவலர்கள் (DEO's) (இடைநிலை, தொடக்கக்கல்வி மற்றும் தனியார் மாவட்ட கல்வி அலுவலர்கள்)
- தொழில்நுட்ப தலைவர் மற்றும் நிர்வாக செயலாளர்: (Technical President & Organizing Secretary)
  மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் (DIPE) (சார்ந்த வருவாய் மாவட்டம்)

**மாநில அளவில்:**

- நிர்வாக தலைவர்: (Adminstrative President)
  பள்ளிக்கல்வி இயக்குநர் (Director of School Education)
- துணைத் தலைவர்: (Vice–President)
  இணை இயக்குநர் – நாட்டு நலப்பணி திட்டம் (Joint Director–NSS)
- தொழில்நுட்பத் தலைவர்: (Technical President)
  முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் – ஆண்கள் & பெண்கள் – (CIPE – Men & Women)
- நிர்வாக செயலாளர்: (Organizing Secretary)
  முதன்மை கல்வி அலுவலர் (CEO) (சார்ந்த வருவாய் மாவட்டம்)
- தொழில்நுட்பச் செயலாளர்: (Technical Secretary)

மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் (DIPE) (சார்ந்த வருவாய் மாவட்டம்)

## தடகளம் மற்றும் விளையாட்டு போட்டிகளுக்கான பொது விதிகள்:

- அனைத்து நிலைகளிலும் (from Zonal Level to State Level) போட்டிகளின் வெற்றியாளர்களைத் தீர்மானிக்க "நாக் அவுட்" (Knock–out) முறை பின்பற்றப்படும்.
- ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் ஜூலை 1–ம் தேதி அன்று அமலில் இருக்கும் கூட்டமைப்பு விதிகள் (Federation Rules) பின்பற்றப்படும்.
- வருவாய் மாவட்ட அளவிலான போட்டிகள் முதல் மாநில அளவிலான போட்டிகள் வரை முதலிடம் மற்றும் இரண்டாமிடம் பிடித்த அணிகளுக்கு "சீடிங்" (Seeding) வழங்கப்படும்.
- அனைத்து நிலைகளிலும் தடகளம், தொடர் ஓட்டம் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் "ஓவர் ஆல் சாம்பியன்ஷிப்" (Overall Championship) கணக்கிடுவதற்கு 1–வது , 2–வது மற்றும் 3–வது இடங்களைப் பிடித்த வெற்றியாளர்களுக்கான மதிப்பெண்கள் முறையே 5 , 3 மற்றும் 1 ஆக இருக்கும்.
- அணிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தாலோ, குறிப்பிட்ட கால நேரத்திற்குள் போட்டிகளை முடிக்கமுடியவில்லை என்றாலோ, போட்டிகளின் கால அளவு (Duration)/ செட்களின் எண்ணிக்கை (Number of Sets)/சுற்றுகளின் கால அளவு (Duration of the Rounds) போன்றவற்றை போட்டி நடத்துபவர்கள் குறைத்துக்கொள்ளலாம்.

- ஒரு கல்வியாண்டில் ஒரு வீரர் ஒரு வயது பிரிவில் மட்டுமே பங்கேற்க முடியும்.
- தனிநபர் போட்டிகளுக்கு "சீடிங்" (Seeding) வழங்கப்பட மாட்டாது.
- போட்டிகளில் பங்கு பெறும் அணிகள் போட்டி ஆரம்பிப்பதற்கு 30 நிமிடங்களுக்கு முன்பாக போட்டி நடக்கும் இடத்திற்கு வருகை புரிதல் வேண்டும்.
- அனைத்து போட்டிகளிலும் நடுவர்களின் முடிவே இறுதியானது.
- மாணவர்களின் பிறந்த தேதியில் மாற்றம் மற்றும் ஆள்மாறாட்டம் போன்ற முறைகேடுகள் (Malpractice) செய்யும் பள்ளி கலந்து கொண்ட போட்டிகளிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவதோடு, எதிர்வரும் போட்டிகளில் பங்கேற்பதிலிருந்து 3 ஆண்டுகள் வரை தடை செய்யப்படும். மேலும், முறைகேடுகளில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான துறை சார்ந்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மூலமாக பிறந்த தேதியில் ஏதேனும் மாற்றம் செய்யப்பட்டிருந்தால், போட்டிகள் தொடங்குவதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரால் (DEO) முறையாக அங்கீகரிக்கப்பட்டு, ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். (பள்ளிக் கல்வி இயக்குநரகத்தின் விதிமுறைகளின்படி பிறந்த தேதி மாற்றம் பொருந்தும்).
- இந்தியப் பள்ளிகளுக்கான விளையாட்டுக் குழும (SGFI) விதிகளின்படி, தேவையிருப்பின், அனைத்து நிலைகளிலும் (From Zonal to State Level) போட்டி நடத்துபவர்கள் போட்டியில் பங்குபெறும் மாணவ மாணவியர்களுக்கு மருத்துவக் குழுவினரைக் கொண்டு மருத்துவ பரிசோதனை (Medical Check-up) செய்துகொள்ளலாம்.
- உடற்கல்வி இயக்குநர்/உடற்கல்வி ஆசிரியர் மட்டுமே அணி மேலாளராக செயல்படலாம். பிற பாட ஆசிரியர் அணி மேலாளராக வர நேர்ந்தால், முறையான காரணம் தெரிவிக்கப்பட வேண்டும். மாணவ மாணவியரின் பெற்றோர்/பயிற்சியாளர் (Parent/Coach) அணி மேலாளராக செயல்பட அனுமதிக்கப்பட மாட்டாது. பாரதியார் தின/குடியரசு தினப் போட்டிகள் (BD/RD Competitions), குடியரசு தின தடகளப் போட்டிகள் (RDS) மற்றும் சதுரங்கப் போட்டிகளுக்கு சார்ந்த மாவட்ட உடற்கல்வி ஆய்வாளரால் நியமிக்கப்படும் நபர்கள் அணி மேலாளராக செயல்படலாம்.
- அனைத்து நிலை போட்டிகளில் (from Zonal Level to State Level) பங்குபெறும் மாணவ மாணவியர்களின் பாதுகாப்பு நலனில் அணி மேலாளர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். போட்டிகளுக்கு பாதுகாப்பாக அழைத்து வருவது, போட்டி நடைபெறும் இடங்களில் மாணவர்களை தனது முழு கண்காணிப்பில் வைத்துக்கொள்வது, போட்டிகள் முடிந்தவுடன் மாணவர்களை பாதுகாப்பாக திரும்ப அழைத்துச் செல்வது முதலியன அணி மேலாளரின் தலையாய கடமையாகும். மாணவ மாணவிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மாணவ மாணவியர்களை நீர்நிலை இருக்கும் இடங்களுக்கோ, சுற்றுலாத் தளங்களுக்கோ அழைத்துச் செல்வதை அணி மேலாளர்கள் முற்றிலும் தவிர்க்கவேண்டும்.

❖ போட்டிகள் சரியான முறையில் நடந்து கொண்டிருக்கையில், தேவையில்லாத புகார்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஆனால், எதிரணியினர் முறைகேடுகளில் ஈடுபட்டிருந்தால், அதற்கான தகுந்த ஆதாரங்களுடன் புகாரளிக்கலாம். இந்த நிலையில், போட்டி நடத்துபவர்கள் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளருடன் கலந்தாலோசித்து, புகாருக்குள்ளான அணி மேலாளரிடம் முறைகேடு செய்ததற்கான எழுத்துப்பூர்வ ஒப்புதலைப் பெற்றுக்கொண்டு உடனடியாக முடிவெடுக்கலாம். ஒருவேளை, புகாருக்குள்ளான அணி மேலாளர் தன்மேல் சுமத்தப்பட்ட புகாரினை வாய் மொழியாகவோ/எழுத்துப்பூர்வமாகவோ மறுத்து போட்டிகள் தொடரும் பட்சத்தில், பின்னாளில் புகார் நிரூபிக்கப்படுமானால், அவர் மீது துறை சார்ந்த கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். குறுவட்ட அளவில் ரூ. 500-ம், வருவாய் மாவட்ட அளவில் ரூ. 750-ம், மாநிலஅளவில் ரூ. 1,000-ம், புகார் கட்டணமாக செலுத்திய பிறகு புகார் ஏற்றுக்கொள்ளப்படும். இந்த தொகை புகார் சம்பந்தப்பட்ட பள்ளி பதிவேடுகள் மற்றும் பிற ஆவணங்களை சரிபார்ப்பதற்காக நியமிக்கப்படும் நபர்களுக்கான போக்குவரத்து மற்றும் இன்னபிற செலவுகளுக்காக பயன்படுத்தப்படும்.

## பாரதியார் தின/குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள்

## திருத்தியமைக்கப்பட்ட எடைப் பிரிவுகள்

பாரதியார் தின/ குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளுக்கு (BDG/RDG, BD/RD Competitions) கீழ்கண்ட எடைப் பிரிவுகள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. ஒரு கல்வி ஆண்டில் குறுவட்டம் முதல் மாநில அளவிலான போட்டிகள் வரை அதே எடைப் பிரிவுகள் தொடரும். போட்டி நடைபெறும் இடங்களில் பயன்படுத்தப்படும் எடை இயந்திரங்கள் அங்கீகரிக்கப்பட்ட எடை இயந்திரங்களாக இருக்கவேண்டும்.

### கபடி

| மாணவர்கள் | கள அளவீடு | மாணவிகள் | கள அளவீடு |
|---|---|---|---|
| 14- வயதிற்கு உட்பட்டவர்கள் (வ. உ.) : 51 கிலோ வரை | 11 மீ x 8 மீ | 14- வயதிற்கு உட்பட்டவர்கள் (வ. உ.): 48 கிலோ வரை | 11 மீ x 8 மீ |
| 17- வயதிற்கு உட்பட்டவர்கள் (வ. உ.): 55 கிலோ வரை | 12 மீ x 8 மீ | 17- வயதிற்கு உட்பட்டவர்கள் (வ. உ.): 55 கிலோ வரை | 12 மீ x 8 மீ |
| 19- வயதிற்கு உட்பட்டவர்கள் (வ. உ.): 70 கிலோ வரை | 13 மீ x 10 மீ | 19- வயதிற்கு உட்பட்டவர்கள் (வ. உ.): 65 கிலோ வரை | 12 மீ x 8 மீ |

வ. உ. - வயதிற்கு உட்பட்டவர்கள்

www.Padasalai.Net

# சிலம்பம்

| எடைப் பிரிவுகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| மாணவர்கள் | | | மாணவிகள் | | |
| 14 – வ. உ. | 17 – வ. உ. | 19 – வ. உ. | 14 – வ. உ. | 17 – வ. உ. | 19 – வ. உ. |
| கம்புச் சண்டை (30–க்கு கீழ்) | கம்புச் சண்டை (30–க்கு கீழ்) | கம்புச் சண்டை (45–க்கு கீழ்) | கம்புச் சண்டை (30 –க்கு கீழ்) | கம்புச் சண்டை (30 –க்கு கீழ்) | கம்புச் சண்டை (45–க்கு கீழ் ) |
| கம்புச் சண்டை (35–க்கு கீழ்) | கம்புச் சண்டை (35–க்கு கீழ்) | கம்புச் சண்டை (50–க்கு கீழ்) | கம்புச் சண்டை (35–க்கு கீழ்) | கம்புச் சண்டை (35–க்கு கீழ்) | கம்புச் சண்டை (50 –க்கு கீழ்) |
| கம்புச் சண்டை (40–க்கு கீழ்) | கம்புச் சண்டை (40–க்கு கீழ்) | கம்புச் சண்டை (55–க்கு கீழ்) | கம்புச் சண்டை (40 –க்கு கீழ்) | கம்புச் சண்டை (40–க்கு கீழ்) | கம்புச் சண்டை (55–க்கு கீழ்) |
| கம்புச் சண்டை (40 மற்றும் 40–க்கு மேல்) | கம்புச் சண்டை (45–க்கு கீழ்) | கம்புச் சண்டை (60–க்கு கீழ்) | கம்புச் சண்டை (40 மற்றும் 40–க்கு மேல்) | கம்புச் சண்டை (45–க்கு கீழ்) | கம்புச் சண்டை (60 –க்கு கீழ்) |
| ஒற்றைக் கம்பு வீச்சு | கம்புச் சண்டை (50–க்கு கீழ்) | கம்புச் சண்டை (70–க்கு கீழ்) | ஒற்றைக் கம்பு வீச்சு | கம்புச் சண்டை (50–க்கு கீழ்) | கம்புச் சண்டை (70 –க்கு கீழ்) |
| இரட்டைக் கம்பு வீச்சு | கம்புச் சண்டை (60–க்கு கீழ்) | கம்புச் சண்டை (70 மற்றும் 70–க்கு மேல்) | இரட்டைக் கம்பு வீச்சு | கம்புச் சண்டை (60–க்கு கீழ்) | கம்புச் சண்டை (70 மற்றும் 70–க்கு மேல்) |
| ----------- | கம்புச் சண்டை (60 மற்றும் 60–க்கு மேல்) | ஒற்றைக் கம்பு வீச்சு | ----------- | கம்புச் சண்டை (60 மற்றும் 60–க்கு மேல்) | ஒற்றைக் கம்பு வீச்சு |
| ----------- | ஒற்றைக் கம்பு வீச்சு | இரட்டைக் கம்பு வீச்சு | ----------- | ஒற்றைக் கம்பு வீச்சு | இரட்டைக் கம்பு வீச்சு |
| ----------- | இரட்டைக் கம்பு வீச்சு | ----------- | ----------- | இரட்டைக் கம்பு வீச்சு | ----------- |

www.Padasalai.Net

## டேக்வாண்டோ

| எடைப் பிரிவுகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| மாணவர்கள் | | | மாணவிகள் | | |
| 14 – வ. உ. | 17 – வ. உ. | 19 – வ. உ. | 14 – வ. உ. | 17 – வ. உ. | 19 – வ. உ. |
| 18 கிலோவிற்கு கீழ் | 35 கிலோவிற்கு கீழ் | 45 கிலோவிற்கு கீழ் | 16 கிலோவிற்கு கீழ் | 32 கிலோவிற்கு கீழ் | 40 கிலோவிற்கு கீழ் |
| 18 முதல் 21–க்கு கீழ் வரை | 35 முதல் 38–க்கு கீழ் வரை | 45 முதல் 48–க்கு கீழ் வரை | 16 முதல் 18–க்கு கீழ் வரை | 32 முதல் 35–க்கு கீழ் வரை | 40 முதல் 42–க்கு கீழ் வரை |
| 21 முதல் 23–க்கு கீழ் வரை | 38 முதல் 41–க்கு கீழ் வரை | 48 முதல் 51–க்கு கீழ் வரை | 18 முதல் 20–க்கு கீழ் வரை | 35 முதல் 38–க்கு கீழ் வரை | 42 முதல் 44–க்கு கீழ் வரை |
| 23 முதல் 25–க்கு கீழ் வரை | 41 முதல் 45–க்கு கீழ் வரை | 51 முதல் 55–க்கு கீழ் வரை | 20 முதல் 22–க்கு கீழ் வரை | 38 முதல் 42–க்கு கீழ் வரை | 44 முதல் 46–க்கு கீழ் வரை |
| 25 முதல் 27–க்கு கீழ் வரை | 45 முதல் 48–க்கு கீழ் வரை | 55 முதல் 59–க்கு கீழ் வரை | 22 முதல் 24–க்கு கீழ் வரை | 42 முதல் 44–க்கு கீழ் வரை | 46 முதல் 49–க்கு கீழ் வரை |
| 27 முதல் 29–க்கு கீழ் வரை | 48 முதல் 51–க்கு கீழ் வரை | 59 முதல் 63–க்கு கீழ் வரை | 24 முதல் 26–க்கு கீழ் வரை | 44 முதல் 46–க்கு கீழ் வரை | 49 முதல் 52–க்கு கீழ் வரை |
| 29 முதல் 32–க்கு கீழ் வரை | 51 முதல் 55–க்கு கீழ் வரை | 63 முதல் 68–க்கு கீழ் வரை | 26 முதல் 29–க்கு கீழ் வரை | 46 முதல் 49–க்கு கீழ் வரை | 52 முதல் 55–க்கு கீழ் வரை |
| 32 முதல் 35–க்கு கீழ் வரை | 55 முதல் 59–க்கு கீழ் வரை | 68 முதல் 73–க்கு கீழ் வரை | 29 முதல் 32–க்கு கீழ் வரை | 49 முதல் 52–க்கு கீழ் வரை | 55 முதல் 59–க்கு கீழ் வரை |
| 35 முதல் 38–க்கு கீழ் வரை | 59 முதல் 63–க்கு கீழ் வரை | 73 முதல் 78–க்கு கீழ் வரை | 32 முதல் 35–க்கு கீழ் வரை | 52 முதல் 55–க்கு கீழ் வரை | 59 முதல் 63–க்கு கீழ் வரை |
| 38 முதல் 41–க்கு கீழ் வரை | 63 முதல் 68–க்கு கீழ் வரை | 78 மற்றும் 78 –க்கு மேல் | 35 முதல் 38–க்கு கீழ் வரை | 55 முதல் 59–க்கு கீழ் வரை | 63 முதல் 68–க்கு கீழ் வரை |
| 41 மற்றும் 41–க்கு மேல் | 68 முதல் 73–க்கு கீழ் வரை | ---------- | 38 மற்றும் 38–க்கு மேல் | 59 முதல் 63–க்கு கீழ் வரை | 68 மற்றும் 68–க்கு மேல் |
| ---------- | 73 முதல் 78–க்கு கீழ் வரை | ---------- | ---------- | 63 முதல் 68–க்கு கீழ் வரை | ---------- |
| ---------- | 78 மற்றும் 78–க்கு மேல் | ---------- | ---------- | 68 மற்றும் 68 –க்கு மேல் | ---------- |

www.Padasalai.Net

## குத்துச்சண்டை

| எடைப் பிரிவுகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| மாணவர்கள் | | | மாணவிகள் | | |
| 14 - வ. உ. | 17 - வ. உ. | 19 - வ. உ. | 14 - வ. உ. | 17 - வ. உ. | 19 - வ. உ. |
| 28 முதல் 30 -க்கு கீழ் வரை | 46-க்கு கீழ் | 46-க்கு கீழ் | 28 முதல் 30-க்கு கீழ் வரை | 42-க்கு கீழ் | 45-க்கு கீழ் |
| 30 முதல் 32-க்கு கீழ் வரை | 46 முதல் 48-க்கு கீழ் வரை | 46 முதல் 49-க்கு கீழ் வரை | 30 முதல் 32-க்கு கீழ் வரை | 42 முதல் 44-க்கு கீழ் வரை | 45 முதல் 48-க்கு கீழ் வரை |
| 32 முதல் 34-க்கு கீழ் வரை | 48 முதல் 50-க்கு கீழ் வரை | 49 முதல் 52-க்கு கீழ் வரை | 32 முதல் 34-க்கு கீழ் வரை | 44 முதல் 46-க்கு கீழ் வரை | 48 முதல் 51-க்கு கீழ் வரை |
| 34 முதல் 36-க்கு கீழ் வரை | 50 முதல் 52-க்கு கீழ் வரை | 52 முதல் 5 6-க்கு கீழ் வரை | 34 முதல் 36-க்கு கீழ் வரை | 46 முதல் 48-க்கு கீழ் வரை | 51 முதல் 54-க்கு கீழ் வரை |
| 36 முதல் 38-க்கு கீழ் வரை | 52 முதல் 54-க்கு கீழ் வரை | 56 முதல் 60-க்கு கீழ் வரை | 36 முதல் 38-க்கு கீழ் வரை | 48 முதல் 50-க்கு கீழ் வரை | 54 முதல் 57-க்கு கீழ் வரை |
| 38 முதல் 40-க்கு கீழ் வரை | 54 முதல் 57-க்கு கீழ் வரை | 60 முதல் 64-க்கு கீழ் வரை | 38 முதல் 40-க்கு கீழ் வரை | 50 முதல் 52-க்கு கீழ் வரை | 57 முதல் 60-க்கு கீழ் வரை |
| 40 முதல் 42-க்கு கீழ் வரை | 57 முதல் 60-க்கு கீழ் வரை | 64 முதல் 69-க்கு கீழ் வரை | 40 முதல் 42-க்கு கீழ் வரை | 52 முதல் 54-க்கு கீழ் வரை | 60 முதல் 64-க்கு கீழ் வரை |
| 42 முதல் 44-க்கு கீழ் வரை | 60 முதல் 6 3-க்கு கீழ் வரை | 69 முதல் 75-க்கு கீழ் வரை | 42 முதல் 44-க்கு கீழ் வரை | 54 முதல் 57-க்கு கீழ் வரை | முதல் 66-க்கு கீழ் வரை |
| 44 முதல் 46-க்கு கீழ் வரை | 63 முதல் 66-க்கு கீழ் வரை | 75 முதல் 81-க்கு கீழ் வரை | 44 முதல் 46-க்கு கீழ் வரை | 57 முதல் 60-க்கு கீழ் வரை | 66 முதல் 69-க்கு கீழ் வரை |
| 46 முதல் 48-க்கு கீழ் வரை | 66 முதல் 70-க்கு கீழ் வரை | 81 முதல் 91-க்கு கீழ் வரை | 46 மற்றும் அதற்கு மேல் முதல் 48-க்கு கீழ் வரை | 60 முதல் 63-க்கு கீழ் வரை | 69 முதல் 75-க்கு கீழ் வரை |
| 48 முதல் 50-க்கு கீழ் வரை | 70 முதல் 75-க்கு கீழ் வரை | 91 மற்றும் 91-க்கு மேல் | 48 முதல் 50-க்கு கீழ் வரை | 63 முதல் 66-க்கு கீழ் வரை | 75 முதல் 81-க்கு கீழ் வரை |
| ---------- | 75 முதல் 80 -க்கு கீழ் வரை | ---------- | ---------- | 66 முதல் 70-க்கு கீழ் வரை | 81 முதல் 81-க்கு மேல் |
| ---------- | 80 மற்றும் 80 -க்கு மேல் | ---------- | ---------- | 70 முதல் 75-க்கு கீழ் வரை | ---------- |
| ---------- | ---------- | ---------- | ---------- | 75 முதல் 80-க்கு கீழ் வரை | ---------- |
| ---------- | ---------- | ---------- | ---------- | 80 மற்றும் 80 -க்கு மேல் | ---------- |

www.Padasalai.Net

## ஜூடோ

| எடைப் பிரிவுகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| மாணவர்கள் | | | மாணவிகள் | | |
| 14 – வ. உ. | 17 – வ. உ. | 19 – வ. உ. | 14 – வ. உ. | 17 – வ. உ. | 19 – வ. உ. |
| 25 கிலோவிற்கு கீழ் | 40 கிலோவிற்கு கீழ் | 40 கிலோவிற்கு கீழ் | 23 கிலோவிற்கு கீழ் | 36 கிலோவிற்கு கீழ் | 36 கிலோவிற்கு கீழ் |
| 30 கிலோவிற்கு கீழ் | 45 கிலோவிற்கு கீழ் | 45 கிலோவிற்கு கீழ் | 27 கிலோவிற்கு கீழ் | 40 கிலோவிற்கு கீழ் | 40 கிலோவிற்கு கீழ் |
| 35 கிலோவிற்கு கீழ் | 50 கிலோவிற்கு கீழ் | 50 கிலோவிற்கு கீழ் | 32 கிலோவிற்கு கீழ் | 44 கிலோவிற்கு கீழ் | 44 கிலோவிற்கு கீழ் |
| 40 கிலோவிற்கு கீழ் | 55 கிலோவிற்கு கீழ் | 55 கிலோவிற்கு கீழ் | 36 கிலோவிற்கு கீழ் | 48 கிலோவிற்கு கீழ் | 48 கிலோவிற்கு கீழ் |
| 45 கிலோவிற்கு கீழ் | 60 கிலோவிற்கு கீழ் | 60 கிலோவிற்கு கீழ் | 40 கிலோவிற்கு கீழ் | 52 கிலோவிற்கு கீழ் | 52 கிலோவிற்கு கீழ் |
| 50 கிலோவிற்கு கீழ் | 66 கிலோவிற்கு கீழ் | 66 கிலோவிற்கு கீழ் | 44 கிலோவிற்கு கீழ் | 57 கிலோவிற்கு கீழ் | 57 கிலோவிற்கு கீழ் |
| 50 கிலோ மற்றும் 50 கிலோவிற்கு மேல் | 73 கிலோவிற்கு கீழ் | 73 கிலோவிற்கு கீழ் | 44 கிலோ மற்றும் 44 கிலோவிற்கு மேல் | 63 கிலோவிற்கு கீழ் | 63 கிலோவிற்கு கீழ் |
| ---------- | 81 கிலோவிற்கு கீழ் | 81 கிலோவிற்கு கீழ் | ---------- | 70 கிலோவிற்கு கீழ் | 70 கிலோவிற்கு கீழ் |
| ---------- | 90 கிலோவிற்கு கீழ் | 90 கிலோவிற்கு கீழ் | ---------- | 70 கிலோ மற்றும் 70 கிலோவிற்கு மேல் | 70 கிலோ மற்றும் 70 கிலோவிற்கு மேல் |
| ---------- | 90 கிலோ மற்றும் 90 கிலோவிற்கு மேல் | 90 கிலோ மற்றும் 90 கிலோவிற்கு மேல் | ---------- | ---------- | ---------- |

07/7/23
07/07/23

Chief Inspector Physical Education (Wom...
D.P.I. Campus, College Road,
Chennai - 600 006.

www.Padasalai.Net